Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 06, 2023

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 06, 2023 | ஒளி: 09 கதிர்: 100 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

## தங்கத்தால் அலங்கரித்த தருஷிக்கு வாழ்த்து



சீனாவில் நடந்து வரும் 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 21 வருடங்களின் பின்னர் பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டப்போட்டியில் எமது நாட்டிற்காக தங்கப் பதக்கத்தை பெற்றுத்தந்த 18 வயதான தருஷி கருணாரத்னவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உள்ளிட்டோர் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

முழுச் செய்தி P6



பெறுமதியான உணவுப் பொருட்கள்

## குரங்குகளால் அழிகின்றன

பல பில்லியன் ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள் குரங்குகளினால் அழிக்கப்படுகின்றன என்றும் சீனா தவிர்ந்த வேறு நாடுகள் சிலவற்றிலும் இருந்து அந்த நாடுகளின் மிருகக்காட்சி சாலைகளுக்காக குரங்குகளை பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான நிரோஷன் பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "வருடாந்தம் 2 மில்லியனுக்கு அதிகமான தேங்காய்கள் குரங்குகளினால் அழிக்கப்படுகின்றன.

தொடர்ச்சி P2

# அபுஹிம் யார்?

### அம்பலப்படுத்துவேன் என்கிறார் ஹரீஸ் எம்.பி சுமந்திரனிடமும் விசாரிக்குமாறு கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி அபுஹிம் தொடர்பான தகவல்களை வெளியிட நான் தயார் என்று தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பியான எச்.எம்.எம்.ஹரீஸ், ஆனால் நம்பிக்கைத் தரக்கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) நடைபெற்றற துறைமுக அதிகார சபை மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், உயிர்த்த ஞாயிறு தொடர்பான விவாதத்தில் சாய்ந்தமருது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த பிரதேசம் தொடர்பில் பிரதீப்சாப் என்ற நபர் சீஐடியில் முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார். சாய்ந்தமருது மக்கள் சஹரானுக்கு உதவினர்.

தொடர்ச்சி P2



## ரயில்கள் ஓடுகின்றன

ரயில்வே அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து உப ரயில் கட்டுப்பாட்டாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.எஸ் குணசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ரயில்வே காவலர்கள் சங்கம் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவண்ணவும் கலந்துகொண்டதாகவும் அதன்பின்னர் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முழுச் செய்தி P2

## அரசாங்கத்துக்கு மனசாட்சி உள்ளதா?

கட்டணங்களை அதிகரித்துக்கொண்டு பணவீக்கம் குறைவடைந்துள்ளதாக புள்ளிவிபரங்களை வெளியிட்டு வரும் அரசாங்கத்துக்கு மனச்சாட்சி என்று ஒன்று உள்ளதா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) விசேட கூற்றொன்றை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

முழுச் செய்தி P2

## மூன்றின் விலைகள் கிடுகிடுவென எகிறின

கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ் மற்றும் தேநீரின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



முழுச் செய்தி P2

## 23:59 மணிவரை கால அவகாசம்



கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை-2023 பரீட்சை 2024ஜனவரி 04ஆம் திகதி முதல், 2024 ஜனவரி 31ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் திருத்தப்பட்ட கால அட்டவணை விரைவில் வெளியாகுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க எதிர்ப்பார்த்திருந்தும் விண்ணப்பிக்க முடியாமல் போனவர்களுக்கு 2023 ஒக்டோபர் 06ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 10ஆம் திகதி 23:59 வரையிலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## முல்லை நீதிபதிக்காக அளுத்கடையில் குரல்

"முல்லைத்தீவு நீதிபதிக்கு நியாயம் வேண்டும், நீதிமன்ற நீதிபதிகளுக்கு அழுத்தம் கொடுப்பதை நிறுத்து" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சட்டத்தரணிகள் அளுத்கடை நீதிமன்ற வளாகத்தில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வியாழக்கிழமை (05) ஈடுபட்டுள்ளனர்.

## டிசெம்பர் விடுமுறையில் அதிரடி மாற்றம்

உயர்தரப் பரீட்சை ஜனவரியில் நடைபெறுவதால் டிசெம்பர் மாத பாடசாலை விடுமுறையில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்படி பாடசாலை தவணை விடுமுறை டிசெம்பர் 22ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) உயர்தரப் பரீட்சை தொடர்பில் கருத்துக்களை முன்வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அமைச்சர் இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

"உயர்தரப் பரீட்சை தினம் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. 2024 ஜனவரி 4 முதல் 31 ஆம் திகதி வரையில் பரீட்சை நடக்கவுள்ளது.




இதன்படி யாரேனும் விண்ணப்பிக்க இருந்தால் அவர்களுக்கு 3 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது. பரீட்சை தொடர்பான கால அட்டவணை அடுத்த வாரமளவில் வெளியிடப்படும்.

தொடர்ச்சி P2

## சீனாவுக்கு பறக்கிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த மாத இறுதியில் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடன் திட்டமிடப்பட்ட சந்திப்பின்போது சீனாவுடனான கடனை மறுசீரமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

ஒக்டோபர் 16ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ள தனது விஜயத்தின் போது சீன ஜனாதிபதி ஜின்பிங் மற்றும் பல தலைவர்களை ஜனாதிபதி ரணில் சந்திக்க உள்ளார்.

தொடர்ச்சி P2



## ரணிலுக்கு சஜித் எச்சரிக்கை

மதத் தலைவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவது பெரும் பாவமாகும் என்றும், அவ்வாறானதொன்றைச் செய்யாமல் ஈஸ்டர் ஞாயிறு தின சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## கஜன் மாமா உயிரிழந்தார்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ரி.எம்.வி.பி கட்சியைச் சேர்ந்த கஜன் மாமா என்றழைக்கப்படும் ரங்கசாமி கனகநாயம் மாரடைப்பால் வியாழக்கிழமை (05) அதிகாலையில் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2




## துர் வார்த்தையால் துஷ்பிரயோகம்

### மத்தும மீது டயானா குற்றச்சாட்டு

ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, தன்னை வார்த்தையால் பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டார் என்று குற்றம் சுமத்திய இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, இவ்வாறான நபர்களை மீண்டும் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைப்பதா? என்று மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.




தொடர்ச்சி P2

## பாறை விழுந்ததில் ஒருவர் பலி

பாறையொன்று வீட்டின் மீது விழுந்ததில் மூன்று பிள்ளைகளின் தந்தை (வயது 78) மரணமடைந்துள்ளார். இந்த சம்பவம் வியாழக்கிழமை (05) காலை காலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அவர் தனது வீட்டில் இருந்தபோது பாறையுடன் மண்சரிவு ஏற்பட்டு வீட்டின் சுவரை இடித்துத் தள்ளியுள்ளது. அதில் சிக்குண்டே இவர் மரணமடைந்துள்ளார்.



தொடர்ச்சி P2

2024 பாதீடுக்கு

## 3 இலட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்காக அரசாங்கத்தினால் 3 இலட்சத்து 86,084 கோடியே 6,788,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவினால் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) சமர்ப்பிக்கப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அபுஹிம் யார்?

சஹ்ரானின் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தனர் என்றும், அதற்காக அரசாங்கம் கல்முனையில் நகரசபையொன்றை ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆனால், சாய்ந்தமருது மக்கள் தேசிய பாதுகாப்புக்கு பெரும் பங்களிப்பு செய்தவர்கள். சஹ்ரானின் குழுவினர் அங்கே இருந்த போது அவர்களை அந்த மக்கள் காட்டிக்கொடுத்து அவர்களை அந்த இடத்திலேயே அழிக்க உதவினர். இதனை நகர சபையுடன் தொடர்புபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் இங்கே பேசும் போது இஸ்லாமிய கொள்கை மற்றும் இஸ்லாமிய கோட்பாடு தொடர்பில் தவறான கருத்துக்களை முன்வைத்துள்ளார். அசாத் மௌலான அவர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நிலையில், அதற்கு பதிலளிக்காது அவர் இஸ்லாமிய கொள்கைகள் தொடர்பில் தவறாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் எவ்வாறு புலனாய்வு பிரிவினரால் பாதுகாக்கப்பட்டுள்ளார் என்பதனையும் கூற வேண்டும். சஹ்ரான் சுதந்திரமான நாடு முழுவதும் சுற்ற உதவியுள்ளனர் என்ற சந்தேகங்கள் உள்ளன. சாரா ஜஸ்மின் விவகாரத்திலும் மர்மங்கள் உள்ளன. ஆட்சி மாற்ற தேவைக்காக இவை நடைபெற்றதா என்ற சந்தேகங்களும் உள்ளன.

அபுஹிம் என்ற நபர் சஹ்ரானுடன் கதைத்துள்ளதாக அவரின் மனைவி விசாரணை ஆணைக்குழுவில் பேசியுள்ளார். அந்த அபுஹிம் யார்? அவர் எங்கிருந்து பேசியுள்ளார் என்பதுவும் தெரியும். உள்ளக விசாரணையோ, நம்பிக்கைத் தரக்கூடிய விசாரணையோ இருக்கும் போது நாங்கள் இந்த அபுஹிம்மின் பின்னணி இந்த தாக்குதலின் பின்னணி தொடர்பில் சாட்சியமளிக்க நான் தயாராக இருக்கின்றேன். இதன்படி இந்த தாக்குதல் இஸ்லாமிய கொள்கைகளுக்காகவோ, முஸ்லிம் சமூகத்திற்காகவோ உருவாக்கப்பட்டது அல்ல என கூறியுள்ளார்.

இதேவேளை, சுமந்திரன் நாட்டின் சுயாதீன நீதித்துறை தொடர்பில் மோசமான கருத்தொன்றை கூறியுள்ளார். அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# குரங்குகளால் அழிகின்றன

அத்துடன் பல பில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அழிக்கப்படுகின்றன. இதற்கு குரங்குகள் ஏற்றுமதிக்கான சுற்றாடல் தொடர்பான அமைப்புகளின் எதிர்ப்பே காரணமாக அமைந்துள்ளன.

எவ்வாறாயினும் நாம் தொடர்ந்து கவனம் செலுத்தி இவ்வாறு வன விலங்குகளால் உணவு உற்பத்திகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு விசேட வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

சீன நிறுவனம் ஒன்று இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் குரங்குகளை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. அந்த நாட்டில் தனியார் துறைக்குச் சொந்தமான மிருகக்காட்சிசாலைகள் ஆயிரக்கணத்தில் காணப்படுவதால் அதற்காகவே இந்த குரங்குகளை கொண்டு செல்வதற்கு அவர்கள் தீர்மானித்திருந்தனர்.

சீனாவில் உள்ள எமது தூதுவருடன் கலந்துரையாடி அந்தளவு மிருகக் காட்சி சாலைகள் அந்த நாட்டில் உள்ளதா என்பது தொடர்பில் ஆராயுமாறும் கேட்டுக் கொண்டோம். அவர்களும் அந்த நாட்டில் பாரிய அளவில் மிருக காட்சி சாலைகள் உள்ளதாகவும் அவற்றுக்கு குரங்குகள் பெருமளவு தேவைப்படுவதாகவும் எமக்கு தெரிவித்திருந்தனர் என்றார்.

# 23:59 மணிவரை கால அவகாசம்

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமாக wdoenets.lk என்பதன் ஊடாகவோ அல்லது wonlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க முடியும்.

அழையுங்கள்.

நேரடி தொலைபேசி இலக்கம்- 1911 0112784208, 0112784537, 0112786616

பெக்ஸ் இலக்கம்- 0112784422

பொது இலக்கம் 0112786200, 0112784201, 0112785202 (263, 265,280,282,443)

மின்னஞ்சல் முகவரி gcealexam@gmail.com

# டிசெம்பர் விடுமுறையில் அதிரடி மாற்றம்

இதேவேளை பாடசாலை விடுமுறை இம்முறை டிசெம்பர் 22ஆம் திகதியளவில் வழங்கப்படலாம். ஆரம்ப பிரிவுகள் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். பரீட்சை முடிவடைந்த பின்னர் மற்றைய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படலாம். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும்" என்றார்.

# ரணிலுக்கு சஜித் எச்சரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க DW ஜேர்மன் அலைவரிசைக்கு வழங்கிய நேர்காணலில் கர்தினால்களுக்கும், இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கும் இடையே பரஸ்பர கருத்து வேறுபாடு உள்ளதான முன்னறிப்பு வெளியிடப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக வண. ஹரோல்ட் அந்தோனி ஆயர் அறிக்கை வெளியிட்டு, அவ்வாறான எத்தகைய முரண்பாடுகளும் இல்லை என்று தெரிவித்துள்ளார் என்றும், ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு கோருவதே அவர்களது ஒரே கோரிக்கையாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேச விசாரணை தேவையில்லை என ஜனாதிபதி அந்த நேர்காணலில் தெரிவித்திருந்த போதிலும், ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் இவ்வாறான சர்வதேச விசாரணை அவசியமானது என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற உடனே இவ்வாறானதொரு மாற்றம் ஏன் ஏற்பட்டது என்று தான் கேள்வி எழுப்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கர்தினால் மற்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும், சனல் 4 காணொளி தொடர்பில் பாராளுமன்றக் குழுவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் எவருக்கும் நம்பிக்கை இல்லை என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தேசிய பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்றும், எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்திக்கும் தேசிய பொறிமுறை குறித்து நம்பிக்கை இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு விவாதத்தில் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் புதிய விசாரணை தேவை என்றும், இதற்கு சர்வதேச உறவு ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவுக்கு பறக்கிறார் ஜனாதிபதி

பெல்ட் அண்ட் ரோட் முயற்சியின் 10ஆவது ஆண்டு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடன் நிவாரணம் தொடர்பில் சீன ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

சீனாவிடமிருந்து கடன் நிவாரணத்தைப் பெறுவதில் இலங்கை சவால்களை எதிர்கொண்டுள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன என்றாலும், இருதரப்புக் கடனை மறுசீரமைக்கும் பொறிமுறை குறித்து கலந்துரையாடல்கள் தொடர்வதாக தெரியவருகிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு ஆதரவாக ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பங்கேற்புடன் ஒரு கூட்டுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ள அதே வேளையில், இந்தியா மற்றும் பாரிஸ் கிளப்பில் இருந்து இலங்கை ஏற்கனவே கடன் உறுதிமொழிகளைப் பெற்றுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் போது கடன் நிவாரணம் தொடர்பில் கணிசமான முன்னேற்றத்தை ஜனாதிபதி அலுவலகம் எதிர்பார்க்கிறது.

கடந்த 12 மாதங்களில் இரண்டு தடவைகள் சீனாவின் அண்டை நாடான ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த போதிலும், கடந்த வருடம் பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி விக்கிரமசிங்க சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள முதலாவது விஜயம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# துர் வார்த்தையால் துஷ்பிரயோகம்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பியே இராஜாங்க அமைச்சர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

செப்டம்பர் 21ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நான் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரான ரஞ்சித் மத்துமபண்டார என்னைப் பற்றி கெட்ட வார்த்தையால் கூறினார். நான் அவர் தொடர்பில் பொய் கூறவில்லை.

அவரே ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் காலத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்பான அமைச்சராக இருந்தார். இது தொடர்பான விடயங்களை கூறியே நான் உரையாற்றினேன். அதன்போது அவர் என்னை 'பெட்டை நாய்' என்று கூறினார். அது தொடர்பான ஒலிப்பதிவு என்னிடம் உள்ளது. இதனை சபாநாயகரிடம் வழங்கியுள்ளேன். இது குறித்த ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நாட்டில் 51 வீதமான பெண்கள் இருக்கின்றனர். அவர்களுக்காகவே நான் கதைக்கின்றேன். இந்த பாராளுமன்றத்தில் 12 பெண்களும் உள்ளனர். இவ்வாறான நிலைமையில் பெண்கள் தொடர்பில் தவறான வசனங்களில் கூறுவது இது முதல் தடவையல்ல. இது வார்த்தையாலான பாலியல் துஷ்பிரயோகமாகும். இது அனைத்து பெண்களையும் அவமதிப்பதை போன்றதே.

என்னாலேயே அவர் இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்றார். நானே அவருக்கு அந்தப் பதவியை கொடுக்க காரணமாகும். அவர் வீட்டில் தமது மனைவி, பிள்ளைகளுக்கு பயன்படுத்தும் வசனங்களை இங்கே பயன்படுத்தக் கூடாது. இது தொடர்பில் கட்டாயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு பின்னர் எவரும் இவ்வாறு பேசக் கூடாது" என தெரிவித்துள்ளார்.

# 3 இலட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 88 ஆயிரத்து 611 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இதில் வடக்கு மாகாணத்துக்கு 451 கோடி ரூபாயும் கிழக்கு மாகாணத்துக்கு 522 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்காக மொத்தமாக 56 ஆயிரத்து 445 கோடி ரூபாயும் ஜனாதிபதிக்கான செலவீனம் மற்றும் அவரின் கீழ் உள்ள அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளுக்கென மொத்தமாக 1 இலட்சத்து 23 ஆயிரத்து 711 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செலவீனம் மற்றும் அவரின் கீழ் உள்ள அமைச்சுக்களுக்கென 88 ஆயிரத்து 726 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஜனாதிபதிக்கான செலவீனமாக 660 கோடி ரூபர் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் பிரதமரின் செலவீனத்துக்காக 115 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கான 1060 கோடி ரூபாயில் பௌத்த மதத்துக்காக 166 கோடி ரூபாயும், இந்து மதத்துக்காக 28 கோடியே 30 இலட்சம் ரூபாயும், கிறிஸ்தவ மதத்துக்காக 21 கோடி ரூபாயும், இஸ்லாம் மதத்துக்காக 18 கோடி ரூபாயும் மிகுதி ஏனைய திணைக்களங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்காக 41 ஆயிரத்து 28 கோடி ரூபாயும், கல்வி அமைச்சுக்காக 23 ஆயிரத்து 705 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரயில்கள் ஓடுகின்றன

உப ரயில் கட்டுப்பாட்டாளர்கள் தங்களது தொழிற்சங்க நடவடிக்கையை முடித்துக் கொண்டு பணிக்கு திரும்பியுள்ளதால் இயல்பு நிலை திரும்பியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அனைத்து உப ரயில் கட்டுப்பாட்டாளர்களின் விடுமுறையை உடனடியாக இரத்து செய்து வெள்ளிக்கிழமை (06) காலை, ரயில்வே திணைக்களம் நண்பகல் 12 மணிக்கு முன் பணிக்கு வருமாறு உத்தரவிட்டது.

உரிய பணியிடங்களுக்கு சேவைக்கு சமூகமளிக்க முடியாதோர் அருகிலுள்ள ரயில் நிலையங்களுக்கு செல்ல வேண்டுமென ரயில்வே பொதுமுகாமையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உப ரயில் கட்டுப்பாட்டாளர் ஒருவரை பாதுகாவலர் தாக்கிய சம்பவம் தொடர்பில் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. இதன் காரணமாக புதன்கிழமை (04) பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்ட நிலையில், ரயில் பயணிகள் போராட்டம் நடத்தியதுடன், நிலைமையை கட்டுப்படுத்த இராணுவமும் குவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்துக்கு மனசாட்சி உள்ளதா?

அரசாங்கம் சமையல் எரிவாயு விலையை 343 ரூபாவால் மீண்டும் அதிகரித்திருக்கிறது. நீர் கட்டணத்தை அதிகரித்திருக்கிறது. மின்சார கட்டணத்தை 3ஆவது தடவையாகவும் அதிகரிக்கவுள்ளது. இவ்வாறு விலைகளை தொடர்ந்து அதிகரித்து மக்களை வாழ முடியாத நிலைக்குள் தள்ளும் இந்த அரசுக்கு மனச்சாட்சி என்று ஒன்று உள்ளதா?

இவ்வாறு விலைகளை, கட்டணங்களை அதிகரித்துக்கொண்டு பணவீக்கம் குறைவடைந்து உள்ளதாக அரசு புள்ளிவிபரங்களை வெளியிட்டு வருகிறது. ஆனால், பணவீக்கம் குறைவடைந்துள்ளமையை மக்களால் உணர முடியவில்லை.

நாட்டில் என்றுமில்லாதவாறு போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்கிறது. இந்நிலையில், புதுவகை போதைப்பொருள் ஒன்றும் புழக்கத்துக்கு வந்திருப்பதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் கடந்த 48 மணி நேரத்தில் 11பேர் காணாமல் போயிருக்கின்றனர். அதில் 5 பேர் சிறுவர்கள். இந்நிலையில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அறிக்கையின் படி இந்த நாட்டில் 10 பேரில் 6 பேர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர். அதவாது நாட்டின் மொத்த சனத்தொகையான 221 இலட்சம் பேரில் 123 இலட்சம் பேர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் நாட்டில் எந்த பிரச்சினையும் இலலை என்ற மன நிலையிலேயே அரசு செயற்படு கின்றது" என்றார்

# மூன்றின் விலைகள் கிடுகிடுவென எகிறின

கொத்து ரொட்டி 20 ரூபாயாலும், பிரைட் ரைஸ் 50 ரூபாயாலும், தேநீரின் விலை 10 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சங்கம் குறிப்பிட்டது.

நீர், மின் கட்டணங்கள் மற்றும் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாகவே மேற்குறிப்பிட்டவற்றின் விலைகளை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள போதிலும், வழமையாக உட்கொள்ளும் உணவின் விலையை அதிகரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என தேசிய நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

இதுபோன்ற உணவுப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

35 ரூபாவுக்கு வாங்கிய முட்டையை வைத்து 150 ரூபாய்க்கு முட்டை அப்பம் விற்பது நியாயமற்றது என்றும் வியாபாரிகள் இலாபம் ஈட்ட வேண்டுமானால், மக்கள் வாங்கும் விலையில் உணவுப் பொருட்களை விற்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கஜன் மாமா உயிரிழந்தார்

இறக்கும்போது அவருக்கு வயது 56 ஆகும்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டு தேவாலயத்தில் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதி ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து ரி.எம்வி.பி கட்சியுடன் இணைந்து செயற்பட்டுவந்த கஜன்மாமா மற்றும் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் உட்பட 5 பேரை கடந்த 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு குறித்த வழக்கில் இருந்து அனைவரையும் நீதிமன்றம் விடுவித்திருந்தது.

# பாறை விழுந்ததில் ஒருவர் பலி

அந்த சந்தர்ப்பத்தில் மரணமடைந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த இன்னும் சிலர்வீ ட்டில் இருந்துள்ளனர். எனினும், அவர்களுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை.

வீட்டுக்கு மேலாக இருக்கும் மலையில் சுமார் 15 அடி உயரத்தில் இருந்தே இந்த பாறை, புரண்டுவந்துள்ளது என்றும் அறியமுடிகின்றது.

# குரங்குபாஞ்சான் சென்ற பிக்குவால் பதற்றம்



■ அப்துல் சலாம் யாசிம்

திருகோணமலை- கிண்ணியா குரங்குபாஞ்சான் இராணுவ முகாம் காணிக்குள் சென்று வரும் பௌத்த மதகுரு தலைமையிலான குழுவினரால் அப்பகுதியில் உள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

பௌத்தப் பிக்கு உட்பட ஐவர் வானகம் ஒன்றில் செவ்வாய்க்கிழமை 3ஆம் திகதியும் 4ஆம் திகதியும் குரங்குபாஞ்சான் முகாமுக்குள் வந்து செல்வதாக கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம். மஹ்திவான் பொலிஸ் நிலையத்திற்கும், கிண்ணியா பிரதேச செயலாளருக்கும் அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கிண்ணியா பிரதேசத்தில் முஸ்லிம்கள் மாத்திரம் வாழ்ந்து வரும் பகுதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான இராணுவத்தினரால் கைவிடப்பட்ட இராணுவ முகாமுக்குள் குறித்த பௌத்த மதகுரு உட்பட குழுவினர் சென்று வருவதினால் ஏதும் பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த கைவிடப்பட்ட இராணுவம் முகாமுக்குள் பௌத்த சிலைகளை வைப்பதற்கு முயற்சிக்கின்றார்களா அல்லது புதையல் தோண்டுவதற்கு ஏதாவது உட்படுகின்றார்களா எனவும் கேள்வி எழுப்புகின்றனர். கிண்ணியா பிரதேச மக்கள் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் காலகட்டத்தில் இவர்களின் வருகை சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அப்பகுதியில் உள்ள மக்களும், நகர சபை உறுப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மோட்டர் சைக்கிள் திருட்டு: மூவர் கைது



■ கனகராசா சரவணன்

அம்பாறை - நிந்தவூர் பிரதேசத்தில் மோட்டர் சைக்கிளை திருடிச் சென்ற மூவரை புதன்கிழமை (04) கைது செய்து 4 மோட்டர் சைக்கிள்களை மீட்டுள்ளதாக நிந்தவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவர் கடந்த 27ஆம் திகதி நிந்தவூர் பிரதேசத்தில் வீடு ஒன்றிற்கு வர்ணம் தீட்டுவதற்காக மோட்டர் சைக்கிளில் சென்று அதனை வீட்டின் வெளியில் நிறுத்திவிட்டு வர்ணம் தீட்டும் வேலையில் ஈடுபட்பிட்டு பிற்பகல் வெளியே வந்து பார்த்தபோது மோட்டர் சைக்கிள் காணப்படாததால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவந்த நிலையில் விசேட புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கு அமைவாக வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை பகுதியில் மோட்டர்சைக்கிளை திருடிச் சென்ற மூவரை புதன்கிழமை (04) கைது செய்ததுடன் பாகங்களாக கழற்றி விற்கும் காராஜ் ஒன்றிலிருந்து திருட்டுப்போன மோட்டர் சைக்கிள் உட்பட 4 மோட்டர் சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 22, 28 மற்றும் 27 வயதுடைய பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## குரங்களுக்கு விசா

சீனாவைத் தவிர வேறு சில நாடுகளும் இலங்கையின் டோக் இனக் குரங்குகளை தமது விலங்கியல் பூங்காக்களுக்காக வழங்குமாறு கோரியிருந்ததாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர வியாழக்கிழமை (05) தெரிவித்துள்ளார்.



குறித்த வேண்டுகோள்களை தத்தமது தூதரகங்களினூடாக முன்வைக்குமாறு இலங்கை அரசாங்கம் அவர்களுக்கு அறிவித்ததாக அவர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விலங்கு உரிமைகள் தொடர்பான அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கு எதிராக மனுத்தாக்கல் செய்ததால் குறித்த கோரிக்கைகளுக்கான செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், காட்டுப்பன்றிகள், குரங்குகள் மற்றும் மயில் போன்ற உயிரினங்களால் வருடாந்தம் 20 பில்லியன் ரூபாய் பெறுமதியான பயிர்கள் அழிவடைகிறது. குரங்குகளின் ஏற்றுமதிக்கு எதிரான விலங்குகள் உரிமை அமைப்புகளுடன் பயிர் சேதத்தைத் தடுப்பதற்கான அவர்களின் முன்மொழிவுகள் குறித்து விவாதித்ததாகவும் தெரிவித்துள்ளார்.



## மின்விறியில் மோதுண்ட மாணவன் உயிரிழப்பு

புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் வகுப்பறையில் வேறு சில மாணவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது, நாற்காலியின் உதவியுடன் மேசையின் மீது ஏறியபோது, கூரையில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறியில் மோதியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த மாணவன் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

புபுரஸ்ஸ பிரதேசத்தில் வசிக்கும் 14 வயதுடைய பாடசாலை மாணவனே ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புஸ்ஸல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு- கேப்பாபிலவு பகுதியில் இடியன் துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக பதிவுகளின்றி இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கேப்பாபிலவு பகுதியிலுள்ள விடொன்றை புதன்கிழமை (04) சோதனயிட்டபோது பதிவுகள் ஏதுமின்றி சட்டவிரோதமாக இரண்டின் துப்பாக்கியை வைத்திருந்த 34 வயதுடைய ஒருவரை பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.



## தங்க ஆபரணங்கள் அபகரிப்பு; இருவர் கைது

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 பிரதேசங்களில் பெண்களை மோட்டர் சைக்கிளில் பின்தொடர்ந்து அவர்களின் தங்க ஆபரணங்களை அபகரித்துச் சென்ற அக்கரைப்பற்றைச சேர்ந்த இருவரை புதன்கிழமை (4) கைது செய்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு நகர், கொக்கட்டிச்சோலை பிரதேசங்களில் வீதியில் தனியாகச் செல்லும் பெண்களை மோட்டார் சைக்கிளில் இருவர் பின் தொடர்ந்து அவர்களின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலிகளை அபகரித்து சென்றுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில், செட்டிபாளையம் கோவில் ஒன்றிற்கு அருகாமையில் மோட்டர் சைக்கிளில் கொள்ளையர்கள் வீதியில் நிற்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து புதன்கிழமை (04) களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் கொள்ளையர்கள் இருவரையும் மடக்கி பிடித்து கைது செய்ததுடன் கொள்ளையிட்ட 4 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் மோட்டர் சைக்கிளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## "கொக்குதொடுவாய் அகழ்வு பணி நிறுத்தப்படும்"

■ சண்முகன் தவசீலன்

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகள் நிறுத்தப்படக்கூடிய சூழலே காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்துள்ளார்.

'மீண்டும் அகழ்வு பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்? ஏற்கனவே எடுக்கப்பட்ட 17 உடற்கூற்றுக்கான பரிசோதனை முடிவுகள் எப்போது கிடைக்கப் பெறும்? என சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவாவை வியாழக்கிழமை (05) தொடர்பு கொண்டு வினவிய போது, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலுள்ள பிரதான கணக்காளர் நிதி இல்லை என புதன்கிழமை (04) கூறியுள்ளதாகவும் அகழ்வு பணி நிறுத்தப்படக்கூடிய சூழலே காணப்படுவதாகவும், உடற்கூற்று பரிசோதனை முடிவுகளும் தாமதமாவதற்கான சாத்திக்கூறுகளே காணப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.



## "தொழிலாளர்களுக்கு காணிகளை பிரித்து கொடு"

■ எஸ்.கே.குமார்

பெருந்தோட்ட தரிசு நிலங்களை தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த சதாசிவம்,

இன்று மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்கள் பல வெறுமனே தரிசு நிலங்களாகி காடுகளாக காட்சியளிக்கின்றன. அதேநேரத்தில் தேயிலை மலைகளில் பெரும்பாலான பகுதிகள் புள்ளு காண்கள் என்றழைக்கப்படும் இடங்களே இவ்வாறு வெறுமனே காடுகளாகி காட்சியளிக்கின்றன.

ஒரு காலத்தில் பெருந்தோட்டப்பகுதிகளில் தோட்ட தொழிலாளர் குடும்பங்கள் தங்களது தோட்ட தொழிலுக்கு அப்பால் தமது குடும்ப வருமானத்தை பெருக்கிகொள்ள பசு மாடுகள் வளர்ப்பு, விவசாயம் என பகுதி நேர சுயத்தொழிலாக மேற்கொண்டனர்.



இதன்போது பசு மாடுகள் வளர்ப்பாளர்களுக்கு தோட்டப்பகுதிகளில் புற்களை வளர்த்து பசுக்களுக்கு தீணியை பெற்றுக்கொள்ள தோட்ட நிர்வாகங்கள் உற்சாகமளித்து புள்ளு காண்களை பிரித்து வழங்கினார்கள்.

காலப் போக்கில் தனியார் நிறுவனங்களும் பசும்பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தினர். இந்த நிலை இக்காலப்பகுதியில் முற்றாக மாறுப்பட்டுள்ளது.

காரணம் பசு வளர்ப்புக்கான வளங்கள் காணப்படுகின்ற போதும் அதை வளர்ப்பதற்கான உட்சாகம் குன்றி போகியதுடன் வசதிகளும் அரசாங்க திணைக்களங்களின் ஊக்குவிப்புகளும் குறைந்து போயுள்ளது.

இந்த நிலையில், பசுக்கள் வளர்ப்புக்கென புள்ளு வளர்க்க தோட்ட நிர்வாகங்களினால் வழங்கப்பட்ட தரிசு நிலங்களில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதிலும் பாதிப்புகள் ஏற்பட பராமரிக்கப்படாத நிலையில் காணப்பட்ட நிலங்களை பெருந்தோட்ட உரிமைக்கு பெறப்பட்டு இன்று காடுகளாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக காடுகளாக தோற்றமளிக்கும் இடங்களை இன்றைய பொருளாதார நெருங்கடி காரணமாகவும் நாட்டில் நிலவும் சுகாதாரம் தொடர்பான முடக்க காலப்பகுதிகளில் தொழில் இழந்து காணப்படும் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கும் பிரித்து வழங்கி அதில் பசு வளர்ப்பு மற்றும் விவசாயத்தை சுயத்தொழிலுக்காக வழங்கி ஊக்கப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க முடியும் என தெரிவித்துள்ளார்.

## 'நடப்போம் சாயி உடன்'

சீரடி சாயி பாபாவின் மகாசமாதி தினமான ஒக்டோபர் 15ஆம் திகதி 'நடப்போம் சாயி உடன்' என்னும் வருடாந்திர உடல் ஆரோக்கிய நடைப்பயணம் இலங்கையில் மிகச் சிறப்பாக நடைபெற திருவருள் கூடியுள்ளது.

5ஆவது வருடமாக 2023ஆம் ஆண்டும் நடத்தப்படவுள்ள இந்நிகழ்வு, ஒக்டோபர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிடிய வஜிர வீதியில் அமைந்துள்ள பழைய கதிரேசன் கோவிலில் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி, கொட்டாஞ்சேனை வீதி வழியாக ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள சாயி நாதனின் சரணாலயத்தை இப்பயணம் வந்தடையும்.



# ஏமாற்றுப் பேர்வழிகள் தொடர்பில் விழிப்பாக இருப்போம்

நாட்டைப் பொறுத்தவரையில் கொலை, கொள்ளை, திருட்டு, வழிபறி மட்டுமன்றி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் குழுவினர் மற்றும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இடையிலேயே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

கடந்த சில மாதங்களில் மட்டும் தெற்கிலும் கொழும்பிலும் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில், தந்தையை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முச்சக்கரவண்டியில் தந்தையுடன் பயணித்த 12 வயதான மகள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணித்துள்ளார். இந்த சம்பவம், புதுக்கடை மாளிகாகந்த பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது.

ஏனைய குற்றச் செயல்கள் நாட்டில் பரவலாக இடம்பெற்றுவருகின்றது. நீதிமன்றத்தில் பிணையில் விட்டவர்களில் பலரும் அதே குற்றங்களுக்காக மீண்டும், மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் காசுக்காக நிதித்திரட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

தன்னுடைய 3 மாத குழந்தைக்கு சத்திர சிகிச்சை செய்யவேண்டுமெனக் கூறி, கினிகத்தேனையில் நிதித்திரட்டிய பெண்ணொருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அந்த குழந்தைக்கு 12 வயதாகிறது. என்பதும், தந்தையின் பராமரிப்பில் இருப்பதாகவும், நாளொன்றுக்கு 5 ஆயிரம் ரூபாவுக்கு முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்தியே இவ்வாறு மோசடியாக நிதித்திரட்டி வருவதாகவும் அறியமுடிகின்றது.

இதேபோல, வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி, பல இலட்சம் ரூபாயை கறந்துகொண்டு ஏமாற்றிய பலரும் சிக்கிக்கொண்டனர். இன்னும் சிலர் தலைமறைவாகியுள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஏதோவொரு வழியில் தங்களுடைய வயிற்றை நிரப்பிக்கொள்ள வேண்டுமென்ற நோக்கில் செய்யப்படும் மோசடியாக செயலாகும்.

களவு,கொள்ளை, வழிபறிகளும் அதிகரித்துள்ளன.

அவ்வாறானவர்களில் பலர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பதுடன், ஜீவிக்க வசதியின்றி இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் என்பதும் அறியமுடிகின்றது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, தங்களுடைய பெறுமதியான பொருட்களுக்கு தாங்களே பொறுப்பாளிகள் என்பதை அவ்வரவர் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இல்லையேல் இருப்பதையும் இழந்து நிர்க்கதியான நிலைக்கு ஆளாகவேண்டி வரலாம்.

வேலைவாய்ப்பு இன்மை, பொருளாதார பிரச்சினை இவையெல்லாம் திருடுவதற்கோ, கொள்ளையிடுவதற்கோ, வழிபறியில் ஈடுபடுவதற்கோ பலரையும் தூண்டக்கூடும். இதற்கெல்லாம் அரசாங்கத்தின் விலை அதிகரிப்புகளும், பொருளாதார மேம்பாடு தொடர்பில் தூர நோக்கமின்மையும் காரணங்களாக அமைந்துள்ளன.

விலைவாசி அதிகரிப்பு சாதாரண மனிதனின் வயிற்றில் அடித்துவிட்டது. என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ளவேண்டும் என்பதுடன், ஏமாற்றுப் பேர்வழிகளிடம் இருந்து விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாகும் என்பதை மீண்டும் வழியுறுத்துகின்றோம்.

இழந்துவிட்டு திருதிருவென முழிப்பதை விடவும் விழிப்பாக இருப்பதே சிறந்தது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பொய்மையாளர்களின் வாழ்க்கை, புரட்டி வீசப்பட்டுவிடும். அற்பமான காரியங்களைக் கூச்சமே இல்லாமல் செய்பவர்களுக்கு தங்களின் எதிர்காலம் குறித்து கிஞ்சித்தும் நினைப்பதில்லை.

சீராக வாழ்பவர்களின் வாழ்க்கை ஒருபோதும் சோர்வடையாது. தங்களின் ஆட்சி மட்டும் நிலையாக இருக்கவேண்டும் என எண்ணும் தலைவர்கள், தாங்கள் நேர்மையுடன் வாழ்பவர்கள் எனப் பிரசாரம் செய்வார்கள். இவர்கள், நீதி பற்றிய எண்ணங்களை கழுவித்துடைத்து விடுகின்றனர்.

நீதியின் வெப்பம் பற்றி அறியாமல் இருப்பதுவே கெட்டவர்களின் குணமாகும். ஆட்டம் போடும் அரசுகள், எதிர்காலத்தில் தமது ஆயுள் குறுகியது எனத் தெரியாமல் இருப்பது அதிசயம்.

பூமியைக் கடவுள் இரட்சிக்கின்றார் எனச் சொல்லும் உலகம், தவறு செய்த எவரையும் காக்கும் கடவுள் தண்டிக்காமல் விடுவதுமில்லை என்பதை உணரவதில்லை. இதையே அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன.

உலகையே ஆளப் பிரியப்படும் மாந்தர்கள், நீதி என்பது என்ன என உணரவேண்டும். எதையும் புரிந்து கொள்ளாமல் புத்திமதி கூறுவது நகைப்பக்குரியது.

வாழ்க்கையில் தோல்வியுற்றால், அதற்காக தீய வழியில், மாற்று வழிகளைச் செய்யக்கூடாது. அந்த எண்ணங்கள் ஆபத்தானவை. தனியொரு மனிதன் செய்த தவறுகளால், பலர் துன்பப்படலாகாது. பழி வாங்க எண்ணுவது இழிவு..

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 21:

# சுதந்திரத்திற்குப் பின்னரான பொருளாதார நலிவும் இனவாதமும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கை சுதந்திரமடைந்தது மாபெரும் வெற்றியாகக் காட்டப்பட்டது. ஆனால் சுதந்திரம் அடைந்த இலங்கையில் தெளிவான பொருளாதாரக் கொள்கை இருக்கவில்லை. டி.எஸ்.சேனாநாயாக்கா சுதந்திர இலங்கையின் ஆட்சி முறையை 'தாராளவாத வர்த்தக ஆட்சி' என்று அழைத்தார். 'திறந்த பொருளாதாரம்' என்பதே முன்னோக்கு என்று அறிவித்தார். ஆனால் இது நடைமுறையில் மிகவும் முரணானதாக இருந்தது. ஏனெனில் இது சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கைத் தேசிய காங்கிரஸ் முன்மொழிந்து வாதிட்ட சோசலிச கொள்கைகளை செயல்படுத்தவில்லை. மாறாக சோசலிசக் கொள்கைகளுக்கு குழி பறித்தது. உண்மையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பொருளாதாரத்தை நலிவடைய அனுமதித்தது. அதேவேளை பொறுப்பற்ற திட்டமிடாத கொள்கைகளால் புதிய நாடு கொண்டிருந்த செழிப்பை வீணடித்தது. ஒப்பீட்டளவில் இலங்கையின் உண்மையான தனிநபர் வருமானம் தாய்லாந்து மற்றும் தென் கொரியாவை விட அதிகமாக இருந்தது. இந்நிலை 1960கள் வரை நீடித்தது.

இதன் பயனை இலங்கை அனுபவித்து வலிமையான பொருளாதாரமாக வளர ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லை. அரிசி உற்பத்தியைத் தவிர மற்றைய துறைகளின் பொருளாதாரம் நலிவடைந்தது. இது ஆட்சியாளர்களின் மோசமான செயற்பாடுகளின் நேரடி விளைவாகும். ஆனால் இதைத் திசைமாற்றுவதற்காக, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தின் பொருளாதார நெருக்கடிகள் இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான பிரித்தானிய மற்றும் இந்தியக் கட்டுப்பாட்டினால் ஏற்பட்டவை என சிங்கள அரசியல்வாதிகள் மக்களை நம்ப வைத்தனர். சுதந்திரத்துக்கு முந்தைய சட்டசபையில் இதற்கெதிராக சட்டம் இயற்றப்பட்டாலும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகம், சில்லறை வர்த்தகம் மற்றும் வங்கி ஆகியவற்றில் அவர்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தினர். ஐக்கிய தேசியக் கட்சி பொருளாதார பிரச்சினைகளை கையாள்வதை விடப் பலிகடாக்களைக் கண்டுபிடித்தது.

இரண்டாம் உலகப் போரின் போது, நவீன பொருளாதாரத்தை நோக்கி ஒரு முன்னோக்கிய செயற்பாடு இருந்தது. இறக்குமதி செய்ய முடியாத பொருட்களை உற்பத்தி செய்வதற்காக அரசாங்கம் 15 தொழிற்சாலைகளை ஆரம்பித்தது. இதில் ஒட்டுப்பலகை, காகிதம், மட்பாண்டங்கள், அமிலங்கள் மற்றும் உருக்கு என்பன பிரதானமானவை. இவை சுதந்திரமடையும் வரை மிகவும் வெற்றிகரமாகச் செயற்பட்டன. ஆனால் சுதந்திரத்துக்குப் பின்னர் இத்தொழிற்சாலைகளைத் தக்கவைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. கட்டற்ற இறக்குமதிகளுக்கு அனுமதியளித்து இத்தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம். சமாதி கட்டியது. ஒட்டுப்பலகை, தோல், பீங்கான் மற்றும் கண்ணாடி தொழிற்சாலைகள் தவிர ஏனைய அனைத்தும் மூடப்பட்டன. இத்தொழிற்சாலைகளில் சீமெந்து மற்றும் காகிதத் தொழிற்சாலைகள் குறித்து சிங்கள அரசியல்வாதிகளின் அக்கறையற்று இருந்தனர். இதனால் இவை இரண்டும் தமிழர் பகுதிகளில் அமைந்திருந்தன. அவை தொடர்ந்தும் வினைத்திறனுடன் இயங்கின.

இரண்டாம் உலகப் போரின்போது சில தனியார் தொழில்முனைவோர் தோன்றினர். இந்த இலங்கையர்கள் ரப்பரினால் உற்பத்தி செய்யப்படும் டயர்கள், பிஸ்கட்டுகள் மற்றும் சோப்புகளை தயாரித்தனர். இவர்கள் இராணுவத்திற்கு அனைத்து வகையான பொருட்களையும் வழங்கினர். இவர்களில் பலர் சிங்களத் தேசியவாதிகள். சுதந்திரத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி, உள்நாட்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தாதாலும் போட்டிப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதித்ததாலும் பாதிக்கப்பட்டனர். தொழில்துறை அமைச்சு நாட்டின் வளமான தாது மணல் படிவுகளைத் தனியார் சுரண்டுவதை எதிர்த்ததோடு டயர் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்தது. ஆனால் அரசாங்கம் இதற்கு நேர்மாறாக, வெளிநாட்டு நிறுவனங்கள், குறிப்பாகத் தேயிலை தொழிலைக் கட்டுப்படுத்திய பெரிய நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டன. இதனால் உள்நாட்டு வர்த்தகர்களும் சிறுவியாபாரிகளும் பெரியளவில் பாதிக்கப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் இறப்பர் வாங்குவதை நிறுத்தியதால் இறப்பர் தொழில் நெருக்கடியை எதிர்கொண்டது. போர் முயற்சியின் ஒரு பகுதியாக வெட்டப்பட்ட மரங்களிலிருந்து உற்பத்தி குறைந்தது. தொழில்துறை நாடுகளில் செயற்கை இறப்பர் தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றது. கொரியப் போர் இறப்பர் விலையில் சுருக்கமான மீட்சியை உருவாக்கியது.

இரண்டாம் உலகப் போரின் போது விஸ்தரிக்கப்பட்ட உணவு மானியங்கள் மற்றும் சுகாதார வசதிகளை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மரபுரிமையாக பெற்றது. இடதுசாரிக் கட்சிகளுக்கான ஆதரவைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கில் போரின் பின்னரும் அவை தொடரப்பட்டன. பொருளாதார நிலைமைகள் மோசமடைந்ததால், அது பட்ஜெட்டில் அதிக சுமையாக மாறியது. மேலும், ஒரு தளர்வான வர்த்தகக் கொள்கையானது செல்வந்த இலங்கையர்கள் ஆடம்பர நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதால் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு குறைவதற்கு இடமளித்தது. மானிய அரிசி வழங்கும் நடைமுறை தொடர்ந்து பராமரிக்கப்பட்டாலும், அரசு நலச் செலவுகளைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கொரியப் போர் பொருட்களின் விலை ஏற்றத்தை உருவாக்கியது. 1950 மற்றும் 1951 இன் முற்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி விலைகள் ஏறக்குறைய 40 சதவீதம் உயர்ந்தது, இதனால் அந்நியச் செலாவணியின் கையிருப்பும் உள்நாட்டு பணப் புழக்கமும் அதிகரித்தது. ஆனாலும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் உணவு மானியங்களை அதிகரிப்பதன் மூலம் இதன் பலன்களை அனுபவிக்க இயலாத வண்ணம் பொருளாதாரத்தைச் சிதைத்தது. இலங்கையில் எழுச்சி பெற்றுவரும் இடதுசாரி அலையைக் கட்டுப்படுத்த உணவு மானியங்களை அதிகரிப்பதை ஓர் உத்தியாக அரசாங்கம் பயன்படுத்தியது. மொத்த அரச செலவீனங்களில் ஐந்தில் ஒரு பங்கு இந்த மானியங்களுக்கு உரியனவாகும். 1951இல் ஏற்றுமதி விலைகள் குறைந்து, இறக்குமதி விலைகள் அதிகரித்தபோது, வரவு-செலவுத் திட்டம் மற்றும் அந்நிய செலாவணி பற்றாக்குறை மிகப்பெரியளவில் வளர்ந்தது. இந்த பொருளாதார சரிவுக்கு அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே காரணமான போதும் பழியை இனத்துவ சிறுபான்மையினர் மீது சாட்டுவது ஆட்சியாளர்களுக்கு இலகுவானதாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் பொருளாதாரத் திட்டமிடலைச் செயல்படுத்த முயற்சிகள் நடந்தன, ஆனால் அவை அரசியல் தேவைகளால் முறியடிக்கப்பட்டன. 1951ஆம் ஆண்டில், ஏற்றுமதி விலைகள் சரிந்து கொண்டிருந்த நேரத்தில், உலக வங்கி நாட்டுக்கு விஜயம் செய்தது. அது நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் பரிந்துரைகள் அடங்கிய 829-பக்க அறிக்கையை வழங்கியது. இதில் நன்கு அறியப்பட்ட பல பரிந்துரைகள் மற்றும் பரிந்துரைகள் உள்ளன: வரிகளை, குறிப்பாக வருமான வரிகளை உயர்த்துவதன் மூலம் வருவாயை அதிகரிக்கவும், உணவு மானியங்கள் மற்றும் மானிய சேவைகளை படிப்படியாக குறைப்பதன் மூலம் செலவினங்களைக் குறைத்தல், உற்பத்தியாளர்களுக்கு வரிச் சலுகைகள் மூலம் உற்பத்தியை அதிகரிக்க வழிசெய்தல், துறைமுகம், ரயில் பாதைகள் மற்றும் வீதிகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்குவித்தல் என்பவை அவற்றில் சில முன்மொழிவுகளாகும்.

சுதந்திர இலங்கை வெற்றியடைந்த ஒரு துறை அரிசி உற்பத்தி. இக்கால கட்டத்தில் அரிசி உற்பத்தியானது அதிகரித்தது. இதில் பெரும்பாலானவை உலர் வலயத்தில் 'குடியேற்றத் திட்டங்கள்' என்று அழைக்கப்படும் புதிய சிங்களக் குடியேற்றங்களின் வழி சாத்தியமாகி இருந்தன. உண்மையில் இத்திட்டமானது பற்றாக்குறையான வருவாயின் திறமையற்ற பயன்பாடாகும். ஆனால் குறுகிய காலத்தில், குடியேற்றத் திட்டங்கள் தென்மேற்கின் சிங்கள வாக்காளர்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியல் ஆதாயங்களைக் கொண்டிருந்தது. ஆனால் நீண்டகாலத்தில் சிங்கள் மக்களை தமிழர் பகுதியில் குடியேற்றுவது மிகப்பெரிய மனக்குறையாகி வன்முறையாக உருமாற்றம் அடைந்தது.

சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் உலர் வலயத்தில் பௌத்த விவசாயிகள் மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள் என்று நம்பினர். இந்த எதிர்பார்ப்பானது விவசாயிகள் மீதான பிரித்தானியக் காலனித்துவ கொள்கையின் தேசியவாத விமர்சனங்களுடன் தொடங்கியது.

பிரித்தானியக் காலனித்துவம் விவசாய சமுதாயத்தை அழித்ததாக அவர்கள் கூறுகின்றனர். ஒரு காலத்தில் பண்டைய நாகரிகத்தின் வளமான மையமாக இருந்த நிலத்தை 'மீண்டும் கைப்பற்றுதல்' என்பதால், காலனித்துவ திட்டங்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் இருப்பதாக சில பௌத்தர்கள் கூறினர்.

காலப்போக்கில் இந்தக் கூற்றுக்களை தொல்லியல் திணைக்களத்தின் உதவியோடு உறுதிப்படுத்த முனைந்தனர். இது இனமுரண்பாட்டின் முக்கியமானதொரு புள்ளியாக இருக்கிறது. இது இன்று குருந்தூர் மலை வரைத் தொடர்ந்தது.

## கடிதங்கள்

### சேவைகள் இல்லாமற் செய்யப்பட்டன

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் ஆளணி பற்றாகுறையுடன் ஏனைய சேவைகளும் இல்லாமல் செய்யப்பட்டது.

1961ஆம் ஆண்டு நாட்டின் மின்சார தேவைக்காக நீர் மின் உற்பத்தி செய்யும் முகமாக நீரை சேமித்து வைக்க சுமார் 95,000 ஹெக்டேயர் தேயிலை பயிரிடப்பட்ட தோட்டக் காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்றது. அதில் பயிரிடப்பட்டிருந்த தேயிலைச் செடிகளையும் தேயிலை தொழிற்சாலைகள், தொழிலாளர் குடியிருப்புகள் ஆகியவற்றை அழித்து அன்று முதல், நீர்த்தேக்க கட்டுமான பணிகளுடன், காணி அளவீடுகள், சுரங்க பாதைகள், ஆரம்பிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் இரவு பகலாக பணியாற்றி 1969ஆம் ஆண்டு நீர்த் தேக்க பணிகள் நிறைவு பெற்ற நிலையில் நீர் சேகரிப்பு ஆரம்பமானது.

மஸ்கெலியா நகரம், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் வைத்தியசாலை ஆகியன நீரில் மூழ்கின. புதிய நகரமும் உருவாக்கப்பட்டது. அப்போது புதிதாக கட்டப்படும் வைத்தியசாலைக்கு 15 ஏக்கர் பரப்பளவில் சகல வசதிகளும் உள்ளடக்கிய வைத்தியசாலை அன்று ஆட்சி செய்த ஐ.தே.க. அரசாங்கத்தின் பிரதமர் டட்லி சேனநாயக்காவினால், இந்திய கட்டட கட்டுமான பணி நிறுவனமான செட்டிநாடு காப்ரேசன் கம்பனி மூலம் அடிக்கல் நாட்டப்பட்டு நான்குமாடி கட்டடம் கட்டப்பட்டது. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலையில் ஆளணி பற்றாகுறையுடன் ஏனைய சேவைகளும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இவை குறித்து கூடிய கவனம் செலுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

செ.தி.பெருமாள்

வாடிக்கையாளர் சேவை வாரம் 2023ஐ

# கொண்டாடும் SLT-MOBITEL

2023 ஒக்டோபர் 2ஆம் திகதி முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி வரையான வாடிக்கையாளர் சேவை வாரம் 2023ஐ கொண்டாடும் வகையில், SLT-MOBITEL தனது வாடிக்கையாளர்களுக்கு பல விறுவிறுப்பான சலுகைகளையும், சேமிப்புகளையும் அறிமுகம் செய்துள்ளதுள்ளதுடன், புதிய வாடிக்கையாளர்களுக்கு வலையமைப்பின் வலிமையை அனுபவிக்க ஊக்குவிக்கின்றது.

ஹோம் மற்றும் மொபைல் இணைப்புகளின் புதிய மற்றும் ஏற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு பெருமளவான சலுகைகள் மற்றும் டிஜிட்டல் அனுகூலங்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன. இவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட இணைப்புத்திறனை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

Home Broadband தீர்வுகளின் கீழ், SLT-MOBITEL இடமிருந்து புதிய இணைப்புகளுக்காக இலவச டேட்டா சலுகை வழங்கப்படுகின்றது. SLT-MOBITEL Fibre புதிய இணைப்புகளுக்கு 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் 100GB போனஸ் டேட்டா மற்றும் 30 நாட்களுக்காக 100GB Entertainments Combo Pack வழங்கப்படும். 4G LTE புதிய இணைப்புகளுக்கு 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் 50GB போனஸ் டேட்டா மற்றும் Youth Add on ஆக 20GB டேட்டா 30 நாட்களுக்கும் வழங்கப்படும். வாடிக்கையாளர் சேவை வாரத்தின் போது, வாடிக்கையாளர்களுக்கு மேலும் தெரிவு செய்யப்பட்ட சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு 50% எனும் உயர் விலைக்கழிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய வாடிக்கையாளர்களுக்கு SLT-MOBITEL இடமிருந்து Eazy Storage வசதியாக 50GB மற்றும் உயர்ந்த அளவு இடவசதிகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு முதல் மாதத்துக்கான டேட்டா கட்டணம் முற்றிலும் இலவசம். நிபந்தனைகளுக்கு உட்பட்ட நிலையில், வாடிக்கையாளர்கள் தமது கடன் அட்டைகளினூடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

மொபைல் பிரிவில், வாடிக்கையாளர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட Samsung ஸ்மார்ட்ஃபோன்களுக்கு ரூ. 90,000 வரையான இலவச சாதனங்கள் விலைக்கழிவுகளை அனுபவிக்க முடியும். மேலும் வாடிக்கையாளர் சேவை வாரத்தில் 30 GB டேட்டா மற்றும் 15% சேமிப்பையும் அனுபவிக்க முடியும். மேலும், மொபைல் வாடிக்கையாளர்களுக்கான பிரத்தியேகமான அனுகூலங்களில், பிற்கொடுப்பனவு புதிய வாடிக்கையாளர்களுக்கு 2GB மற்றும் 10GB மேலதிக டேட்டாவை தெரிவு செய்யப்பட்ட பக்கேஜ்களுக்கு அனுபவிக்க முடியும். முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பக்கேஜ்களுக்கு 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் மேலதிக 10GB டேட்டா வழங்கப்படும்.




mCash App இனூடாக ரூ. 1000க்கு அதிகமான கொடுப்பனவுகளுக்கு mCash சலுகை செல்லுபடியாகும். வாடிக்கையாளர்களுக்கு 5GB டேட்டா, 300 M2M நிமிடங்கள் மற்றும் SMSகள் கிடைக்கும். ரூ. 200க்கு மேற்பட்ட ரீலோட்களுக்கு அவர்களுக்கு 2GB டேட்டா வழங்கப்படும். இவற்றுடன் mTunes மற்றும் Newalert சேவைகளுக்கு ஒரு மாத காலப்பகுதிக்கு இலவச பதிவும் வழங்கப்படும்.

விசேட வாரத்தில், வாடிக்கையாளர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட ரோமிங் பிளான்கள் மீதான வாடகையில் 10% விலைக்கழிவை அனுபவிக்க முடியும்.

மேலும், தெரிவு செய்யப்பட்ட நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் IDD அழைப்புகளின் போது ஒவ்வொரு நான்காவது நிமிடமும் இலவசமாக வழங்கப்படும். 0710 755 777 ஊடாக SLT-MOBITEL Mobile WhatsApp Virtual Assistant உடன் தொடர்புகளை பேணும் வாடிக்கையாளர்களுக்கு, ஏனைய டிஜிட்டல் நாளிகைகளையும் பார்வையிட்டு விறுவிறுப்பான பரிசுகளை வெல்லலாம்.

வாடிக்கையாளர் சேவை வாரத்தினால், SLT-MOBITEL இன் புதிய மற்றும் ஏற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற இணைப்பு தீர்வுகளை அனுபவிக்க முடியும் என்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக சிறந்த சேவைகள் மற்றும் தீர்வுகளினூடாக பெறுமதி சேர்ப்பதற்கான அர்ப்பணிப்பு மீள உறுதி செய்யப்பட்டுள்ளது.

# சியெட் களனி சூழல் நிலைப்பேற்றில் கவனம் செலுத்துகின்றது

சியட் களனி நிறுவனம் அண்மையில் அதன் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் மர நடுகைத் திட்டத்தில் ஈடுபட வைத்தது. ஒரு தொழில்துறையில் சூழல் நிலைப்பேற்றை ஒரு சிலர் மட்டும் உச்சரிக்கும் மந்திரமாக அன்றி, அதற்கான அர்ப்பணிப்பில் ஒவ்வொருவரையும் ஈடுபட வைக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



சியெட் டயர் உற்பத்தியாளர்களின் சமகால மரநடுகைத் திட்டம் அதன் களனி மற்றும் களுத்துறை வளாகங்களில் ஏக காலத்தில் இடம்பெற்றன. இதன்போது ஊழியர்களுக்கு ஆயிரம் மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. அந்த மரக்கன்றுகளை அவர்கள் தமது வீட்டுத் தோட்டங்களில் நட்டு பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு இவை வழங்கப்பட்டுள்ளன.

சியெட் களனி முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி கூறுகையில், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், ஊழியர் தொழில்சங்க பிரதிநிதிகள், நிறுவனத்தின் அலுவலக மற்றும் தொழில்சாலை ஊழியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

'எமது சுற்றாடல் பாதிப்புக்களை குறைக்கும் வகையிலான பல திட்டங்களில் நாம் ஏற்கனவே கணிசமான முதலீடுகளை செய்துள்ளோம். ஆனால் இந்த முயற்சிகள் எல்லாமே சிரேஷ்ட முகாமைத்துவத்தின் முடிவுகளாகவே அமைந்துள்ளன.

எவ்வாறாயினும் பசுமையாக்கம் என்பது ஒவ்வொரு ஊழியரதும் ஆன்மாவில் ஊடுறுவ வேண்டிய ஒன்றென நாம் கருதுகின்றோம். அப்போதுதான் சாத்தியமான அளவு ஆகக் கூடுதலான தாக்கத்தை உருவாக்க முடியும். இந்த மர நடுகைத் திட்டத்தின் நோக்கமும் அதுவேயாகும்' என்று கூறினார்.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் ஏற்கனவே மேற்கொண்டு வரும் நிலைப்பேற்று முயற்சிகளில் முக்கிய ஒன்றாக விரைவில் அமுல் செய்யப்படவுள்ள மிகப் பெரிய சூரிய சக்தி திட்டம் அமையவுள்ளது. நிர்வாக மற்றும் விற்பனை செயற்பாட்டில் கடதாசி நுகர்வை குறைத்து கடதாசி பாவணையற்ற ஒரு அலுவலகத்தை ஸ்தாபித்தல் அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல், வர்த்தக முடிவு செயற்பாட்டில் பல்வகையான 3R செயற்பாடுகள் (Reduce, Reuse, Recycle- குறைத்தல், மீள்பாவனை, மீள் சுற்று) என்பனவும் இதில் அடங்கும்.


சியெட் களனி ஹோல்டிங்ஸில் குறிப்பாக நிலைப்பேற்று கண்ணோட்டங்களில் உற்பத்தி வடிவமைப்பு, அபிவிருத்தி, உற்பத்தி படிமுறை என்பனவற்றிலும் விரிவு படுத்தப்பட்டுள்ளன. சியெட் 'செக்யூரா டிரைவ்' டயர் உற்பத்தி தொடரானது குறைந்தளவு எரிபொருளை நுகர்ந்து கூடுதலான அளவு மைல்கள் தூரத்தை தாண்டக் கூடிய தன்மையோடு பயணிக்க கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சியெட் 'பியுல் ஸ்மார்ட்' வகை சார்ந்த டயர்கள் அதன் பெயர் பிரதிபலிப்பதைப் போலவே எரிபொருள் ஆற்றல் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சியெட் களனியின் உற்பத்தி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி செயல் தொடரில் உகந்த அளவு எடையுடன் செயற்பாட்டுத் திறனும் உயர் ரக மீள் செயற்பாட்டு திறன் கொண்டதாகவும், சுற்றாடல் நலன் சார்ந்ததாகவும் உற்பத்திகளை உருவாக்கும் திட்டங்களும் உள்ளன.

உற்பத்திகளில் குறைந்தளவு தண்ணீரை பயன்படுத்தும் பொறிமுறைகளை அந்நிறுவனம் ஏற்கனவே அறிமுகம் செய்துள்ளது. மீள புதுப்பிக்கக் கூடிய சக்தியை அதிகமாக பயன்படுத்தல் மற்றும் சக்திப் பாதுகாப்பு பொறிமுறைகள் என்பனவற்றை அறிமுகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.





## நானாக நானில்லை

நினைப்பிருக்கு
யாரென்று தெரியவில்லை
கைபேசியிருக்கு
அழைக்க யாருமேயில்லை

தனித்திருக்க ஆசையிருக்கு
மைனாக்கள் கூட்டம் தான்
விடுவதேயில்லை

நிலவு அருகிலேயிருக்கு
விண்மீனை மட்டும்
காணவில்லை

மனதில் அதிக கனமிருக்கு
மறக்க தோனுதேயில்லை
ஆசைகள் அதிகமிருக்கு.....
மாறாத ஒன்றுக்காய்
மாற விருப்பமில்லை

அனுதினமும் தொல்லையிருக்கு
அகத்தை திசைதிருப்ப
வேறு வழியில்லையே

சிரித்து பேச கதையிருக்கு
காவியம் படைக்க எவருமில்லை!
எவருமேயில்லையே...

லக்ஷி ரவிசேகரன்



## தேர்தல் நாள்

எல்லா நாட்களிலும்
மன்னர் ஆட்சி
நடைபெறும்
என்றாவது ஒரு நாள்
மக்கள் ஆட்சி
நடைபெறும்
அன்று மட்டும் தான்
முகத்திற்கு பதிலாக
முன்னங்கையை
நீட்டிக் கொண்டு
நிற்போம்
கண்ணாடி பார்க்காத
எமக்கு
கரி இடம் மாறி
இருப்பதை
காட்டவா போகிறது
ஞானம்.

ரவிகாந்தன்
திருகோணமலை







## ஆழ்மன அங்கலாய்ப்பு...!

நம்ம நாடு சுபீட்சத்தை நோக்கி....
நமக்கென்ன குறைச்சல்.
வீடெல்லாம் விளை பொருட்கள்
வேண்டிய வேண்டாப் பொருட்களெல்லாம்
குவிந்து கிடக்கின்றன.

தட்டுப்பாடு என்ற சொல்லுக்கே
தட்டுப்பாடு.
இல்லையென்ற சொல்லே
இல்லையாகி...
சிங்கப்பூரே எமது ஊர்களைப் பார்த்து
புரவமுயர்த்துகின்ற வகையில்.

நாமெல்லாம் சுபீட்சத்தின் உச்சியில்.
சுரண்டல்கள் ஊழல்கள்
அடாவடிகள் ஆக்கிரமிப்புக்கள்
மனிதர்களை விரட்டும்
புனிதபூமிப் பிரகடனங்கள்

எதுவுமேயற்ற
சமாதான பூமியாய்..
இத்தனை வேகமாய் எமது நாட்டில்
இப்படியோர் எண்ணிப்பார்க்கமுடியா
மாற்றத்தின் பாய்ச்சல்.


இனங்களெல்லாம் ஒற்றுமையாய்
கைகோர்த்து சோதரராய்
எமது சுந்தர சுதந்திர நாட்டில்
எத்தனை ஆனந்தமாய்..
உரத்து உற்சாகமாக

எல்லோருடனும் இணைந்து
எனது உதடுகளும் சுதந்திர
கீதத்தை உரத்து உச்சரிக்க.....
'மகன் எழும்படா ...என்னடா சத்தமாய்'
அம்மாவின் குரல் அதிர்வில்
என் அதிகாலை உறக்கத்தில் திடீர் விழிப்பு..

அட கனவின் நிழல்களா ...
கண்ட கனவெல்லாம்
நனவாகுமா என்ற ஓர் ஏக்கத்தில்
நாட்கள் நகருகின்றன
மிரட்டல்களின் மெத்தனத்தில்.!

ஷெல்லிதாசன்
திருகோணமலை





## எல்லைகள் எனக்கேது..

சருகுகளின் சறுக்கல்களில்
இப்பிரபஞ்சத்தின் அவசரங்கள் தெரிகிறது
நேற்றைய நாளில் என்னைக்
கடந்து சென்றவர்கள்,
இன்றைய நாளில் வேறு
மாதிரித் தோற்றமளிக்கிறார்கள்

இதற்கிடையில்...
சுடுகுழலில் அடைத்துக் கொள்கிறாய்
சபிக்கப்பட்ட காதலை
வெடித்துச் சிதறும் வெளிர்மஞ்சள்
புகையில் வொட்காவின் வாசனை

கிறங்கிப் போகின்றன
நீலப்பாம்புகள் முப்பொழுதும்
துளைத்தெடுக்கும் திண்மக் காமத்தை
வேற்றுக் கிரகமொன்றில்
குளித்துக் கரைத்துக் கொண்டிருக்கிறாய்

அமில மழையில் நான்...
அண்டத்தின் அனைத்துச்
சோகங்களையும் தாபங்களையும்
உனக்குள் திளைத்துத் தொலைகின்றேன்

நிம்மி சிவா
( கண்ணம்மா )
ஜேர்மனி




ஜப்பான்

# மேகங்களில் மைக்ரோ பிளாஸ்டிக்

மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் என்றழைக்கப்படும் சிறு பிளாஸ்டிக் துணுக்குகள் வான் மேகங்களில் இருப்பதை முதன்முறையாக ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஜப்பானிய விஞ்ஞானிகள், மேற்கு அமெரிக்காவின் நகர்ப்புறங்களை தாண்டிய பகுதிகளில் உள்ள வானில் 3,000 அடிக்கு மேல் காற்றிலிருந்து மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்துள்ளார்கள். அவர்கள் சேகரித்த இடங்களில் எல்லாம்



மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் இருந்துள்ளது. பிளாஸ்டிக் பைகள், செயற்கை இழைகள் மற்றும் பெரிய பிளாஸ்டிக் பொருட்களில் இருக்கும் சிறு துகள்கள் சிறுக சிறுக உடைந்து காலப்போக்கில் மேகத்தை சென்றடைந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

ஒருவேளை, காற்று மற்றும் வளிமண்டல செயல்முறையின் போது இந்த பிளாஸ்டிக் துணுக்குகள் மேகத்திற்கு போயிருக்கலாம் என கருதப்படுகிறது. மேகங்களில் மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் இருப்பது சுற்றுச்சூழலில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும். இவை மேகத்தின் செயல்பாடுகளை மாற்றியமைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் வானிலை மற்றும் மழை பெய்வதில் கூட மாற்றம் உண்டாகலாம் என கூறப்படுகிறது.

அமெரிக்கா

## வைரம் கலந்த நகப்பூச்சு




விலை உயர்ந்த பொருட்கள் மீது மக்களுக்கு ஆர்வம் அதிகமாக இருக்கும். அந்தவகையில் விலை உயர்ந்த கார், ஆடைகள், அணிகலன்கள் போன்றவற்றை கேள்விபட்டிருப்போம். அந்த வரிசையில் தற்போது நகப்பூச்சு (நெயில் பாலிஷ்) இடம்பிடித்துள்ளது,

பொதுவாக பெண்கள் சிலர் நகங்களை பராமரித்து பல நிறங்களில் நகப்பூச்சு போட்டுக்கொள்வார்கள். அவர்களுக்கு பிடித்தமான நிறங்களில் நகப்பூச்சு அறிமுகமாகி வருகிறது.

அந்த வகையில் தற்போது உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த பிளாக் டைமண்ட் நகப்பூச்சு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அசச்சூர் என்ற பெயர் கொண்ட இந்த நெயில் பாலிஷியை லோஸ்ஏஞ்சல்சை சேர்ந்த வடிவமைப்பாளரான அசாச்சூர் போகாசியன் என்பவர் உருவாக்கியுள்ளார். இந்த நகப்பூச்சு தூரத்தில் இருந்து பார்க்கும்போது சாதாரணமாக இருக்கும் ஆனால் அதன் உள்ளே 267 காரட் கருப்பு வைரம் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கனடா தூதரக அதிகாரிகளை திரும்பப்பெற இந்தியா வலியுறுத்தல்

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள சீக்கிய குருதவாராவுக்கு அருகே மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.


இந்த சூழலில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக பாராளுமன்றத்தில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.



இதனால் இந்தியா-கனடா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் இந்தியாவில் உள்ள கனடா தூதரக அதிகாரிகள் 41 பேரை திரும்ப அழைத்து கொள்ள வேண்டும் என்று கனடாவிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


எனினும் இந்தியா தரப்பிலோ அல்லது கனடா தரப்பிலோ இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

## வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிப்பு



2023ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல் பரிசை பிரான்ஸ் நாட்டை சேர்ந்த மவுங்கி பவேண்டி, அமெரிக்காவை சேர்ந்த லூயி புருஸ் மற்றும் ரஷ்யாவை அலெக்செய் எகிமோவு ஆகிய மூன்று பேருக்கு பகிர்ந்து அறிவிக்கப்பட்டுள்ளது. குவாண்டம் புள்ளிகள் கண்டுபிடிப்பு மற்றும் தொகுப்பு (*discovery and synthesis of quantum dots*) தொடர்பான ஆய்வு மேற்கொண்டதற்காக இந்த பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நம்பிக்கை இழந்து வரும் விஞ்ஞானிகள்



சந்திரயான் - 3 விண்கலம் கொண்டு சென்ற விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரை இறங்கியது. ஒரு குறிப்பிட்ட அளவிலான ஆய்வுகளை செய்துவந்த நிலையில், நிலவில் சூரியன் அஸ்தமித்தது.

இதனால் 14 நாட்கள் லேண்டரும், ரோவரும் உறக்க நிலைக்கு கொண்டு செல்லப்பட்டது. மீண்டும் சூரியன் உதிக்க ஆரம்பித்ததும் உறக்க நிலையில் இருந்து ரோவர் மற்றும் லேண்டரை மீண்டும் எழுப்பி ஆய்வில் ஈடுபட விஞ்ஞானிகள் தீவிரமாக முயன்றுள்ளனர். குறிப்பாக சூரியனின் கதிர்களால் லேண்டரில் உள்ள மின்கலங்கள் மின்னேற்றப்பட்டு ஏனைய ஆய்வுகளை தெளிவாக மேற்கொள்ள விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

ஆனால், லேண்டர் மற்றும் ரோவரில் இருந்து எந்தவிதமான சமிக்ஞைகளும் கிடைக்காததால் இஸ்ரோ தனது நம்பிக்கையை இழந்து வருகிறது. குறிப்பாக, சூரியன் உதயமாகி ஒரு சில வாரங்கள் கடந்த நிலையில் ரோவர் எந்தவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மணிப்பூர்

## மணிப்பூரில் மீண்டும் வன்முறை

இந்தியாவின் மணிப்பூர் மாநிலம், இம்பால் மேற்கு மாவட்டத்தில் மீண்டும் வன்முறை வெடித்ததையடுத்து பட்சோட்ய் பொலிஸ் நிலையப் பகுதியில் உள்ள நியூ கெய்தெல்மன்பியில் இரண்டு வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்தில் பாதுகாப்புப் படையினர் மற்றும் தீயணைப்பு படையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து அப்பகுதியில் மேலதிக பாதுகாப்புப் போடப்பட்டுள்ளதாகவும், தற்போது நிலைமை கட்டுட்க்குள் இருப்பதாகவும் மேலும் வன்முறை தாக்குதலுக்குப் பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






ஆசியப் போட்டிகளில் 21 ஆண்டுகளுக்குப் பின்னர்

# தங்கத்தால் இலங்கையை அலங்கரித்த தருஷி

ஆசியப் போட்டிகளில் தடகளத்தில் 21 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்குத் தங்கப் பதக்கத்தை தருஷி கருணாரத்ன பெற்றுக் கொடுத்துள்ளார்.

சீனாவின் ஹன்சூவில் நடைபெற்று வரும் ஆசியப் போட்டிகளில் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்ற பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியை இரண்டு நிமிடங்கள் மூன்று செக்கன்கள் 20 மில்லி செக்கன்களில் கடந்தே தங்கப் பதக்கத்தை 18 வயதான தருஷி வென்றிருந்தார். இதற்கு முன்னதாக 2002ஆம் ஆண்டு சுசந்திகா ஜெயசிங்க 100 மீற்றரிலும், தமயந்தி தர்ஷா 400 மீற்றரிலும் இறுதியாக இலங்கை சார்பாக ஆசியப் போட்டிகளில் தடகளத்தில் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தனர்.

இதேவேளை தருஷி, நதீஷ ராமநாயக்க, ஜெதேஷி உத்தர, சயுரி மென்டிஸ் ஆகியோரை உள்ளடக்கிய இலங்கையணி, பெண்களுக்கான 4x400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் போட்டித் தூரத்தை மூன்று நிமிடங்கள் 30 செக்கன்கள் 88 மில்லி செக்கன்களில் கடந்து வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தது. இப்பிரிவில் இலங்கை வெல்லும் முதலாவது பதக்கம் இதுவாகும்.

இந்நிலையில், ஆண்களுக்கான 4 x 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியிலும் கலிங்க குமாரகே, அருண தர்ஷன, பபசர நிக்கு, ராஜித ராஜகருணாவை உள்ளடக்கிய இலங்கையணி வெண்கலப் பதக்கத்தை, போட்டித் தூரத்தை மூன்று நிமிடங்கள் இரண்டு செக்கன்கள் 55 மில்லி செக்கன்களில் பூர்த்தி செய்து வென்றிருந்தது.

இதேவேளை பெண்களுக்கான ஈட்டியெறிதலில் 61.57 மீற்றர் தூரத்தை எறிந்து இலங்கையின் நதீஷ டில்ஹானி வெள்ளிப் பதக்கத்தைப் பெற்று, இலங்கையின் ஆசியப் போட்டிகளில் தடகளத்தில் பதக்கத்துக்கான 17 ஆண்டுக் காத்திருப்பை முடித்து வைத்திருந்தார். இறுதியாக சுசந்திகாவே 2006ஆம் ஆண்டு 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் வெள்ளிப் பதக்கத்தையும், வெண்கலப் பதக்கத்தையும் வென்றிருந்தார். ஆசியப் போட்டி வரலாற்றில் மைதான நிகழ்ச்சிகளில் பதக்கம் வென்ற முதலாவது இலங்கையர் நதீஷ டில்ஹானி ஆவார்.

சம்பியன்ஸ் லீக்:

## நியூகாசிலிடம் தோற்ற பரிஸ் ஸா ஜெர்மைன்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் 1-4 என்ற கோல் கணக்கில் தோற்றுள்ளது.

இந்நிலையில், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இதேவேளை, இன்னொரு புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றுள்ளது.

## கராதேயில் தங்கம் வென்று சாதனை

எம்.எஸ்.எம். ஸாகிர்



இரண்டாவது திறந்த சர்வதேச கராத்தே சம்பியன்ஷிப் போட்டி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்றபோது, கராத்தே குமித்தே போட்டியில் எம்.எம். றிகாஸ், தங்கப் பதக்கமும் காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கமும் பெற்று சம்பியனாகத் தெரிவாகி, சான்றிதழுடன் பதக்கங்களைச் சுவீகரித்துக் கொண்டார்.

மேல்மாகாண பாடசாலைகள் கால்பந்தாட்டம்:



## சம்பியனான கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனி

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனம் கல்வியமைச்சுடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்த அகில இலங்கை பாடசாலை களுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் மேல் மாகாண பாடசாலை களுக்கிடையிலான போட்டியில் கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியுடனான இறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்று அல் ஹுசைனி சம்பியனானது.

## தங்கம் வென்ற சஜாத்துக்கு சம்மாந்துறையில் வரவேற்பு

வி.ரி. சகாதேவராஜா



கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடத்திய விளையாட்டுப் போட்டியில் ஈட்டியெறிதலில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்த சம்மாந்துறை அல் முனீர் வித்தியாலய மாணவன் யூ.எல்.எம். சஜாத்துக்கு அண்மையில் ஊர்வலத்துடன் கூடிய பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

16 வயதுக்குட்பட்ட ஈட்டியெறிதலில் 44.14 மீற்றர் தூரத்தில் எறிந்து முதலிடம் பெற்று சஜாத் தேசிய மட்டத்துக்கு தெரிவாகி உள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 06 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.